**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - கல்வி உதவித் தொகை – ஆதிதிராவிடர், கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு அயல்நாடு சென்று உயர் கல்வி பயில்வதற்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் - மறுசீரமைத்தல் - **TOEFL / IELTS / GRE / GMAT** ஆகிய தகுதித் தேர்வுகளை உள்ளடக்கிய திட்டப்பகுதி-1 மற்றும் அயல்நாடு சென்று கல்வி பயிலும் திட்டப் பகுதி-2 ஆக மொத்தம் ரூ.5.24 கோடி செலவினத்தில் மேற்கொள்ள நடப்பு நிதியாண்டில் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-3)துறை**

அரசாணை (நிலை) எண்.106 நாள் 14.12.2021

பிலவ வருடம், கார்த்திகை 28 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.70,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.3)துறை, நாள் 08.08.2002.

2) அரசாணை (நிலை) எண். 65, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.3)துறை, நாள். 14.06.2010.

3) ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண். அய்1/19821/2021, நாள் 12.10.2021.

*********

**ஆணை :-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் / மாணவியர்கள் அயல்நாடு சென்று உயர்க்கல்வி பயில புதிய விதிமுறைகள் ஏற்படுத்தி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அயல்நாடு சென்று கல்வி பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவர்களது பெற்றோரின் ஆண்டு

வருமானத்தை ரூ.1,44,000/- லிருந்து ரூ.3,00,000/- இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

3. 2021-2022-ஆம் நிதியாண்டின் வரவு செலவு அறிக்கையின் போது மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார் :-

*"ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்பதற்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் திருத்தியமைக்கப்படும். இத்திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து இதுவரை 4 மாணவர்கள் மட்டுமே பயனடைந்துள்ளனர் என்பது வருத்தத்திற்குரியது. இத்திட்டத்திற்கான நிதியொதுக்கீடு 5 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்"*

4. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக, ஆதிதிராவிடர் நல ஆணையர் தனது 12.10.2021 நாளிட்ட கடிதத்தில், அயல்நாடு சென்று உயர்கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் எனவும் அதன்படி, மாணவர் பயிலும் மேற்படிப்பிற்கேற்றவாறு அயல்நாடுகளில் அப்படிப்பினை படிப்பதற்கான அடிப்படை தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட **TOEFL / IELTS / GRE / GMAT** ஆகிய தகுதித் தேர்வுகளை மாணவர் பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் மேற்குறித்த தகுதித் தேர்வுக்கான பயிற்சிகளை வழங்குவதை உள்ளடக்கியதாக திட்டப்பகுதி-1 (Part I)-இல் இருக்கும் எனவும், மேற்கண்ட **TOEFL / IELTS / GRE / GMAT** போன்ற தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களின் திட்ட வரையறைகளுக்குட்பட்டு தாம் விரும்பும் நாட்டில், கல்வி நிறுவனத்தில், மேற்படிப்பினை தொடர்வதற்கு கல்வி உதவித் தொகை வழங்குவதை உள்ளடக்கியதாக திட்டப்பகுதி-2 (Part-II)-இல் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

5. மேற்படி, இத்திட்டப்பகுதி-1 (Part-I)-இன் கீழ், பயன்பெற மாணாக்கர்களுக்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டு, மாணாக்கர்களுக்கு பயிற்சியளிக்க தரமிக்க பயிற்சி நிறுவனங்களை கண்டறிந்து ஒப்பந்தப்புள்ளி கேட்டு அதனடிப்படையில் பயிற்சி நிறுவனங்களை குறிப்பிட்ட காலத்திற்கு தரப்பட்டியலிடப்பட்டு (Empanelment of training institutions for a specific period) அந்நிறுவனங்கள் வாயிலாக பயிற்சி அளிக்கலாம் எனவும், அவ்வாறு தரப்பட்டியலிடப்பட்ட பிறகே ஓர் ஆண்டிற்கு 500 மாணாக்கர்களுக்கு பயிற்சியளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

6. திட்ட பகுதி-2 (Part-II)-இல் பயன்பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பினை ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாக நிர்ணயம் செய்தும், மேலும், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகையின் அளவானது கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாலும், உயர்ந்துவரும் பணவீக்க அடிப்படையில் கல்வி உதவித் தொகையின் கீழ் வழங்கப்படும் பல்வேறு கட்டணங்கள் திருத்தியமைக்கப்படுதல் அவசியமாகும் எனவும், மேலும் ஓராண்டில் பயன்பெறக்கூடிய பயனாளிகள் எண்ணிக்கை அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதன் அடிப்படையில், பயிலக்கூடிய நாடு மற்றும் பயிலும் படிப்பு ஆகியவற்றை பொறுத்து தோராயமாக ஒரு மாணவருக்கு ரூ.36.00 இலட்சம் வீதம் பத்து மாணாக்கர்களுக்கு ரூ.3.60 கோடி செலவினம் (Part-II) ஏற்படும் எனவும், மேலும் மேற்குறிப்பிட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுடன் திட்டப்பகுதி-1 (Part-I)-இல் **GRE / GMAT / TOEFL / IELTS** போன்ற தேர்வுகளுக்கான பயிற்சிக் கட்டணமாக 500 மாணாக்கர்களுக்கு தோராயமாக ஆண்டிற்கு ரூ.1.64 கோடி செலவினம் ஏற்படும் எனவும், ஆகமொத்தம் ரூ.5.24 கோடியை 2021-2022-ஆம் நிதியாண்டிற்கு நிதியொதுக்கீடு செய்து தருமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

7. இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு அயல்நாடு சென்று உயர்கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, **TOEFL / IELTS / GRE** மற்றும் **GMAT** ஆகிய தகுதி தேர்வுகளை உள்ளடக்கிய திட்டப்பகுதி-1-இல் ஒவ்வொரு தகுதி தேர்விற்கும் 125 மாணாக்கர்கள் வீதம் அனைத்து தகுதி தேர்வுக்கும் 500 மாணாக்கர்களுக்கு ரூ.1.64 கோடி செலவில் பயிற்சி வழங்கவும், மாணாக்கர்கள் தாம் விரும்பும் நாட்டின் கல்வி நிறுவனத்தின் மேல் படிப்பினை தொடர்வதற்கு கல்வி உதவித்தொகை தோராயமாக ரூ.36.00 இலட்சம் வீதம் பத்து மாணாக்கர்களுக்கு ரூ.3.60 கோடி செலவினத்தில், அயல்நாடு சென்று கல்வி பயில உதவித் தொகை வழங்கும் திட்டம், திட்டப்பகுதி-2-ஆகவும் செயல்படுத்த மொத்த செலவினம் ரூ.5.24 கோடிக்கு நடப்பு ஆண்டில் (2021 - 2022) நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி கீழ்காணும் நிபந்தனைகளுடன் அரசு ஆணையிடுகிறது.

1) ஒரு குடும்பத்திற்கு ஒரு முறை மட்டும் இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

2) **TOEFL / IELTS / GRE / GMAT** ஆகிய பயிற்சிகளில் ஒரு மாணவருக்கு ஏதேனும் ஒன்றில் பயிற்சி பெற அனுமதி அளிக்கப்படுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 46153/DS(SM) /நிதி(ஆதி(ம)பந)/2021, நாள் 16.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மருத்துவ கல்வி இயக்குநர், சென்னை-600 005.
பொறியியல் கல்வி இயக்குநர், சென்னை – 600 025.
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை-600 005.
கால்நடை மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், சென்னை -600 007.
சட்டக் கல்வி இயக்குநர், சென்னை-600 035.
அனைத்து பல்கலைக்கழக பதிவாளர்கள்.
மாநில முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை 600 006/18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 600 001/5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம் , சென்னை-600 009.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நிதித் (ஆதி(ம)பந) துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து பிரிவுகள்
சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/12/2021.
பிரிவு அலுவலர்
14/12/2021